### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

# கரூர் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கிக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர்.ஜூன்.2.

கரூர் மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுமாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியாரால் தன்மான உணர்வூட்டப்பட்டு, தமிழ் நிலத்தின் மக்களுக்கென, தமிழினத்தின் வாழ்வுக்கென, தமிழ் மொழியின் உரிமைக்கென பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட கழகத்தை அரை நூற்றாண்டு காலம் தன் தோளில் சுமந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தனது 14வது வயதில் தமிழ் கொடியை ஏந்தி திருவாரூர் மண்ணில் தமிழ்காக்கும் போராட்டத்தில் மாணவராக தொடங்கி, தாய் தமிழ்நாட்டை 19 ஆண்டுகள் ஆட்சி செய்து, தமிழ் இனத்தின் தலைவராகவும், பல இந்திய பிரதமர்களையும், குடியரசுத் தலைவர்களையும் முன்மொழிந்து, இந்திய துணைகண்டத்தின் அரசியல் போக்கையும் இயக்கும் வித்தகராகவும் விளங்கியவர்.

பொது வாழ்க்கையில் 95வது வயது வரை ஓய்வின்றி உழைத்து நவீன தமிழகத்தை உருவாக்கி தலைசிறந்த நிர்வாகியாக திகழ்ந்தவர்.

60 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல், கலை, இலக்கியம், திரைத்துறை, பத்திரிக்கையாளர், இதழியல் துறை இப்படி பலதுறைகளில் மிளிர்ந்து பிரமிப்பூட்டும் வகையில் தமிழ்நாட்டிற்கும், இந்திய துணைக்கண்டத்திற்கும் தனது பங்களிப்பை அளித்தவர்.

ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், மாணவிகள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், சிறுபான்மையினர் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக "கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர்" நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.



"ஏற்றுக் கொண்ட இலட்சியத்தை வெற்றி பெறச் செய்யும் பணியில் எனது பயணம் தொடரும், இடையூறு எதுவரினும் நில்லேன், இறுதி மூச்சுள்ள வரை உழைப்பேன்" என முழங்கிச் செயலாற்றியவர். வெற்றிக்கும், தோல்விக்கும் நாமே பொறுப்பு என்கிற மன உறுதியுடன்; ஒரு பணியில் இறங்குகிற எந்த மனிதனையும் அயர்வோ, சோர்வோ அணுகாது அந்த மனிதனின் வாழ்வில் பின்னடைவும் ஏற்படாது என எத்தனையோதுன்பங்களையும், தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு, அடுக்கடுக்காக வந்த சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொண்டு, அவற்றையெல்லாம் தகர்த்தெரிந்து நின்று, தடம்புரளாமல் தமிழினத்திற்கு தொண்டு செய்த முத்தமிழ றிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளில் 03.06.2026 புதன்கிழமை அன்று காலை 09.00 மணி அளவில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து கொண்டாடப்படவுள்ளது.

தமிழ்! தமிழ்!!, தமிழ் இனம்! என வாழ்ந்து நம் உணர்வாய் - என்றைக்கும் நம்மை இயக்கும் "முத்தமிழறிஞரின் திருவுருவ படத்தினை. கரூர் மாவட்டம் முழுவதும் கழகத்தினர் அனைவரின் வீடுகளிலும் வைத்து வணங்குவதோடு, அனைத்துப் பகுதிகளிலும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும், ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு இடத்தில் வைத்து வணங்கி இனிப்புகள் வழங்கியும், மருத்துவ முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் என அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு, மாநகரம், பகுதி, ஒன்றிய, பேரூர், வட்டக் கழக, கிளைக்கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தக அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி, தொண்டர் அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசார ஓட்டுனர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, மீனவர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சிகளை எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

# மும்பை தி.மு.க. சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## பொறுப்புக்குழுத் தலைவர் ம,சேசுராசு தலைமை! மாறன் ஆரிய சங்காரன் – அன்பழகன் பொற்கோ பங்கேற்பு!

மும்பை தி.மு.க. சார்பில் நாளை (03.06.2026 - புதன்கிழமை) மாலை 6மணிக்கு தாராவி கலைஞர் மாளிகையில் தமிழினத் தலைவர்,முன்னாள் முதல்வர் தலைவர் அலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றுகிறார்.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ பிறந்தநாள் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்குகிறார்.

இவ்விழாவில் மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன் மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ. இரவிச்சந்திரன், கழக இலக்கிய அணி தலைவர் ஜான்சாமுவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மும்பை கழகத்தின் மூத்தஉறுப்பினர்விழுப்புரம் அரசூர் இரா.மதியழகன், முலுண்ட் ஆ.பாலசுப்பிரமணியன்,காரை எஸ். இரவீந்திரன், மலபார்குன்று பகுதி திமுக செயலாளர் சேரை ச.பிரகாஸ்,கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகக்குழு உறுப்பினர் ஜாகிர் உசேன், திருவள்ளுவர் நற்பணி மன்றம் தலைவர் ந.இராதா கிருஸ்ணன்,மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா.ரவிரஜினி,இதயம் அறக்கட்டளை தலைவர் மகேந்திரன் அண்ணாமலை, கொலாபா தமிழ்ச் சங்கம் தலைவர் வ.பன்னீர் செல்வம், பொன்.சுப்பிரமணியன், இராசேந்திரன் மும்பை மகிழ்ச்சி மகளீர் பேரவை நிர்வாகிகள் திருமதி வனிதா இளங்கோவன், திருமதி சுமதி மதியழகன்,திருமதி வெண்ணிலா சுரேஸ், ஜி.முத்து திராவிடர் கழக துணைத் தலைவர் இ.அந்தோணி, துணைச் செயலாளர் அ. கண்ணன், உலகநாதன், சி.பாண்டியன், அழகு ராஜா,குப்பன், மகா விஸ்ணு,

ஒர்லி பகுதி தி.மு.க. செயலாளர்கள் இரா. காந்தி, கொலாபா அப்துல் திவான் மைதீன், வக்கோலா சேலம் மா.சீனிவாசன், ஐவேரிபஜார் வே.இரவிச்சந்திரன், கோலிவாடா பி.இராமையா, தி.மு.க. முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி, கே.கே.செல்வராஜ் தாராவி பகுதி என்.வி.சண்முகராசன், தே.ஸ்டீபன், கோ. கருணாநிதி, மா. ராசன், கோவிந்தன், முனீஸ்வரன், காளிதாஸ் சேர்மன்துரை, எஸ்.செல்வ ராஜ், வக்கோலா அன்பில் ரஞ்சன் காளியப்பன், கொலாபா ரமேஸ், தாடி கருப்பையா, மகாராஜ், போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் நன்றியுரையாற்றுகிறார்.

விழா முடிவில் அனைவருக்கும் உணவு வழங்கப்படுகிறது

கழக தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு கழக பணிமனை மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. மும்பையில் பல்வேறு பகுதிகளில் இனிப்புகள் வழங்கப்படுகிறது.

# கலைஞர் - காலத்தை வென்ற ஒளிச்சுடர்




**பெ**ண்ணுக்கு உரிமை என்றால் பேச்சல்ல என்றாய்,
பேரொளி போலப் பாதைகள் பல திறந்தாய்!
சுயஉதவிக் குழுக்களால் சிறகுகள் தந்தாய்,
சுமந்த துயரைக் களைந்திடச் சமூகத்தை மாற்றினாய்!
விதவையின் விழியில் விடியலை விதைத்தாய்,
விழுந்த மனங்களிலும் நம்பிக்கையை நட்டாய்!
கலப்புத் திருமணத்திற்கு கரம் நீட்டி நின்றாய்,
கட்டிய மரபுகளைக் கருத்தால் வென்றாய்!
கல்விக்கு கோயிலாய் பல்கலைகள் கட்டினாய்,
காலத்தின் கதவுகளை இளையோர்க்குத் திறந்தாய்!
அறிவின் அகல்விளக்கை அணையாமல் காத்தாய்,
அறியாமை இருளை அழித்தெறிந்து சென்றாய்!
ஆறுகள் ஆழமாய் ஓடிடத் தூர்வாரினாய், ஆயிரம் உழவர்களின் வாழ்வோட்டம் காத்தாய்!
உழவர் சந்தைகள் உருவாக்கி வைத்தாய், உழைப்பின் வியர்வைக்கு உயர்ந்த விலை தந்தாய்!
வருமுன் காப்போம் என வறுமையைத் தடுத்தாய்,
வாழ்வின் வாசலிலே வளமெனும் தீபம் ஏற்றாய்!
கிராமத்தின் குரலுக்கு கைகொடுத்து நின்றாய்,
கீழ்த்தட்டு மக்களின் கனவுகளை வென்றாய்!
தொழிலுக்கு தமிழகம் திகழவே செய்தாய்,
தொலைநாட்டு முதலீட்டைத் தமிழ்மண்ணில் சேர்த்தாய்!
டைடல் பூங்காவால் தகவல் யுகம் தந்தாய், தமிழரின் திறமையை உலகெங்கும் கொண்டாய்!
வள்ளுவன் வானுயர வாழ்த்துச் சிலை வைத்தாய்,
வாழ்வியல் வேதத்துக்கு வளமான உரை தந்தாய்!
குறளின் கருத்துகளை குவலயம் அறியச் செய்தாய்,
குலமத வேறுபாடைக் குரலாலே வென்றாய்!
தாக்கியவர்களையும் தழுவிடும் இதயம் கொண்டாய்,
தாழ்ந்தோரின் துயரத்தில் தந்தையென நின்றாய்!
இலக்கியம், கல்வியென இமயங்கள் போற்றினாய்,
இனமான தமிழருக்கு இதயமாய் வாழ்ந்தாய்!
சுயமரியாதைச் சூரியனாய் சுடரொளி வீசினாய்,
சமத்துவச் சாலையில் சமூகத்தை நடத்தினாய்!
தொண்ணூற்று ஐந்தாண்டும் தோயாத மனம் கொண்டாய்,
தோன்றிய தலைமுறைகள் தோறும் நினைவாய் நின்றாய்!
மண்ணில் பிறந்த மனிதர் பலர் உண்டு, மக்களின் மனதில் பிறப்பவர் சிலரே!
காலத்தை வென்ற கலைஞர் நீரே
காலங்கள் கடந்தும் தமிழின் ஒளிச்சுடரே!



**மருத்துவர் ப.முருகதாஸ்**
விருதாச்சலம்

### பொறியியல் படிப்புக்கு

# விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு!

சென்னை, ஜூன். 2-

பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்க ஜூன் 5 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அரசு, தனியார் பொறியியல் பல்கலை. கல்லூரிகளில் பி.இ, பி.டெக். இளநிலை பொறியியல் படிப்புகளின் அரசு ஒதுக்கீடு இடங்களில் சேருவதற்காக கலந்தாய்வுக்கு விண்ணப்பம் பதிவு இணையம் வழியாக நடைபெற்று வருகிறது.

கடந்த மே3ம் தேதி தொடங்கப்பட்ட இந்த விண்ணப்ப பதிவுகளில் இணைய வழி மூலம் 2.81 லட்சம் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 2.17 லட்சம் கட்டணம் செலுத்தியுள்ள நிலையில் 1.84 லட்சம் பேர் சான்றிதழ் பதிவேற்றமும் செய்துள்ளனர். இந்த நிலையில் அதிகப்படியான மாணவர்கள் ஆர்வம் காட்டி வருவதால், மாணவர்களின் நலன் கருதி பொறியியல் படிப்புக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் ஜூன் 5 வரை நீட்டிக்கபட்டுள்ளது.

மேலும் மாணவர்களின் சந்தேகங்களை தெளிவுபடுத்திக்கொள்ள மாநிலம் முழுவதும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை விண்ணப்பிக்காத தகுதியுள்ள மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை ஆன்லைனில் சமர்ப்பித்து இந்த ஆண்டிற்கான பொறியியல் சேர்க்கையில் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மக்கள் பணியே கழகத்தின் மூச்சு!

உடன்பிறப்பின் உள்ளத்தில்
குடியிருக்கும் தலைவா..
அறிவே ஆலயம்,
மக்கள் பணியே வேதம்,
என்றே வாழ்ந்து
எம்மை வழி நடத்தும் தலைவா…

உளியின் அடியால்
புண்பட்ட அங்கம்,
கலையின் வடிவில்
சிலையாவது போல்,
எதிர்ப்பின் தணலில்
பண்பட்ட தங்கம்,
எம் தலைவன் வழியில்
நடைபோடும் கழகம்,

வாக்கு அரசியல்
நம்மை தோற்கடித்தாலும்,
ஒன்றிய அரசு
நம்மை புறக்கணித்தாலும்,
மக்கள் நலப்பணி
செய்திட விழையும்
முயற்சி உழைப்பு
இதுவே உம் வெற்றி ….

பெற்ற தமிழ் மண்ணை,
தமிழக மக்களை
வெற்றிப் படிகளில்
ஏற்றிடும் ஏணியாய்,
சாதனை திட்டங்கள்
பற்பல தந்து
சரித்திரம் படைத்ததே
உமது வெற்றி,

வெவ்வேறு மதத்தில்
பிறந்திருந்தாலும்,
பேசும் மொழியால்
பிரிந்திருந்தாலும்,
மனிதம் ஒன்றே
தலையாய்க்கொண்டு
மனதால் இணைத்த
அரசியலே உம் வெற்றி

நம் இனம் எதுவென்று
நூற்றாண்டுகளாக
மறந்த நமக்கு,
திராவிட இனம் என்பதை
நூறாண்டுகளாக நினைவிருத்தி
உணரச் செய்ததே
நம் கழகம் தானே;

நான்கு மொழிகளை
ஈன்றெடுத்த தாய்மொழி
எம் தமிழ் மொழி ஆதலால்,
அதை செம்மொழி என்று



பார் அறியச் செய்ததே
தலைவா உம் உழைப்புதானே;

குலக்கல்வி, தேவதாசி,
இரட்டைக்குவளை, முலைவரி,
என்று இருந்த
முறையற்ற சமூகத்தை
கொண்டிருந்த தமிழகத்தை
சுய மரியாதை கற்று
சமூக நீதியுடன், தமிழன்
தலைநிமிர்ந்து நடந்திட,
உழைத்ததே நம்
கழகம் தானே;

எதிர்வரும் எதிர்காலம்
மாறுவதாக எண்ணி,
பிம்பத்தை நம்பி
ஏமாறாமல் இருக்க,
கால வளர்ச்சிக்கேற்ப
உண்மைகளை உணர்த்தி
மாற்ற வேண்டும் நாம்;

வரும் தடை கடந்து
திறம்பட நடந்து,
கட்டுக்கோப்பாய் கழகத்தை
இட்டுச் சென்ற தலைவா,
உம் வழி நடக்கும்
தளபதி வழியில்,
கரம்கோர்த்து உழைப்போம்,
வெற்றிக் கனி பறித்து
உமக்குக் காணிக்கை ஆக்குவோம்.



**எம்.ஜாகீர் உசேன்**

# தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைகுலைய வைத்துள்ள முதல்வர்!

## 'தினகரன்' சிறப்பு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன். 2-

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு எவ்வாறெல்லாம் சீரழிந்து வருகின்றது என்பதை பல சம்பவங்களை குறிப்பிட்டு தலையங்கம் எழுதி குற்றம் சாட்டியுள்ளது. 'தினகரன்' நாளேடு.

அது வருமாறு:-



தினகரன்

ஜூன் 1, 2026 திங்கட்கிழமை

சரியும் சட்டம் ஒழுங்கு

தமிழகத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று, காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் ஆதரவுடன் புதிய கூட்டணியை அமைத்து ஆட்சியைப் பிடித்துள்ளது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற நாளில் இருந்தே, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக கோவை சூலூர் பகுதியில் சிறுமி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கடலூரில் இளம்பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டதும், சென்னை வேளச்சேரியில் மூதாட்டி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதும், மதுராந்தகத்தில் மூதாட்டியை நகைக்காக கொலை செய்த சம்பவமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மரக்காணத்தில் 11வயது சிறுமிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை, கடலூர் அருகே வடலூரில் 30 வயது இளம்பெண்ணின் சடலம் மீட்பு உள்ளிட்டவை சட்டம் ஒழுங்கை நிலைகுலைய வைக்கின்றன. எப்போதுமே கொலைகளமாக திகழும் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் தற்போது கண்ணில் கண்டவர்களை எல்லாம் அரிவாளால் வெட்டி சென்ற ஒரு கும்பல் 10 பேரை வெட்டி காயப்படுத்தியுள்ளது. வேறு வழியின்றி 3

தமிழகத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று, காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் ஆதரவுடன் புதிய கூட்டணியை அமைத்து ஆட்சியைப் பிடித்துள்ளது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற நாளில் இருந்தே, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக கோவை சூலூர் பகுதியில் சிறுமி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கடலூரில் இளம்பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டதும், சென்னை வேளச்சேரியில் மூதாட்டி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதும், மதுராந்தகத்தில் மூதாட்டியை நகைக்காக கொலை செய்த சம்பவமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மரக்காணத்தில் 11வயது சிறுமிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை, கடலூர் அருகே வடலூரில் 30 வயது இளம் பெண்ணின் சடலம் மீட்பு உள்ளிட்டவை சட்டம் ஒழுங்கை நிலைகுலைய வைக்கின்றன.

எப்போதுமே கொலை களமாக திகழும் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் தற்போது கண்ணில் கண்டவர்களை எல்லாம் அரிவாளால் வெட்டி சென்ற ஒரு கும்பல் 10 பேரை வெட்டி காயப்படுத்தியுள்ளது. வேறு வழியின்றி 3 தினங்களுக்கு பின்னர் போலீசார் நேற்று ஒருவரை துப்பாக்கியால் காலில் சுட்டு பிடித்துள்ளனர். தமிழகத்தில் இன்றளவில் நடக்கும் கொலை, கொள்ளை சம்பவங்களை அடுக்கி கொண்டே போகலாம்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், குற்றங்களைக் குறைப்பதற்கும் சில முக்கிய கோப்புகளில் விஜய் கையெழுத்திட்டார். மாநிலம் முழுவதும் போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த 37 மாவட்டங்கள் மற்றும் 9 முக்கிய நகரங்களை உள்ளடக்கிய 65 காவல் நிலையங்களுடன் கூடிய போதைப்பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது.

ஆனால் தமிழகத்தில் இப்போதும் நடக்கும் பல வன்முறை சம்பவங்கள் போதையின் பாதையில் திரியும் இளைஞர்களும், சிறுவர்களும் அரிவாளை கையில் எடுத்து கொண்டு களம் புகுந்திருப்பதையே படம் பிடிக்கிறது. பெண்கள் பாதுகாப்பிற்கு சிறப்பு பிரிவு உருவாக்கப்படும் என கூறிய தமிழக அரசு, சிங்கப்பெண் அதிரடிப்படையை உருவாக்க உத்தரவிட்டது. ஆனால் அதற்கான தொடக்க விழா கூட இன்னமும் நடத்தப்படவில்லை.

அதற்குள்ளாக தூத்துக்குடி மாவட்டத்தில் அவர்கள் உருவாக்கிய சிங்கப்பெண் அதிரடிப்படையில் பெண் போலீசிடம், இன்ஸ்பெக்டரே சில்மிஷம் செய்த சம்பவம் பரபரப்பை உருவாக்கியுள்ளது. பயிர்களை மேயும் வேலிகளை வைத்து கொண்டு முதல்வர் விஜய், பெண்களுக்கு எப்படி பாதுகாப்பு தரப்போகிறார் என்பது கேள்விக்குறியாகி வருகிறது. சென்னையில் 16வயது சிறுவனுக்கு மது கொடுத்து விட்டு, பாலியல் வன்கொடுமையில் ஏட்டு ஈடுபட்டதாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

தவெக ஆட்சி அமைத்து ஒரு மாதம் ஆவதற்குள் பாலியல் வன்கொடுமை, கொலை, ரவுடியிசம் போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. விளம்பரங்களிலும், ரீல்ஸ்களிலும் அதிக கவனம் செலுத்தும் அமைச்சர்களும், அரசு நிர்வாகமும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தவறிவிட்டதாக எதிர்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

தவெக நிர்வாகிகளே சில இடங்களில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவதும், பொதுமக்களை மிரட்டி மாமூல் வாங்கிய சம்பவங்களும் பொதுவெளியில் அரங்கேறி வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்காகவே ஆட்சிக்கு வருவதை போல தோற்றத்தை உருவாக்கிய தவெக அரசு, இப்போது ஆட்சியில் அமர்ந்தவுடன் சட்டம் ஒழுங்கில் கோட்டை விடுவது சரியல்ல.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு குற்றம் சாட்டியுள்ளது.